In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.26 |
| Name: Narayanan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 26-08-2025.

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் ஓசூர் மாநாகராட்சியில் மாநகர திட்டமிடுநர் ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 23.7.2023ம் தேதி மாவட்ட துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். 20.07.2023ம் தேதி நடந்த கொலை வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிப்பதாக தெரிவித்தார். திண்டுக்கல் அண்ணா நகர், விமலா மருத்துவமனை அருகில் 20.07.2023ம் தேதி மாலை 7.15 மணிக்கு தெருவில் உள்ள மின்விளக்கு எரிந்ததா என்ற விவரத்தை கேட்டார். நான் அந்த பகுதியில் உள்ள லைன்மேனை விசாரித்து அன்றைய தினம் தெருவிளக்கு எரிந்ததாக சான்று வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் சான்று நான் வழங்கியதுதான். ஆய்வாளர் அது சம்மந்தமாக என்னிடம் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.25. நான் கொடுத்த சான்று அதசாஆ.26. காவல்துணை கண்காணிப்பாளர் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்.

1, 3 மற்றும் 5ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

ஆய்வாளர் அவர்கள் மாநகராட்சி ஆணையாளரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் என்னிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாக தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் வழங்கிய சான்றில் யாரை விசாரித்து தெருவிளக்கு எரிந்ததாக குறிப்பிட்டுச்சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4 **மற்றும் 6 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1,3 மற்றும் 5 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்கள்.

**7, 8 மற்றும் 9 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1,3 மற்றும் 5 ம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறார்கள்.

மறுவிசாரணை – இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.08.26 15:48:33 +0530

Principal District Judge,
Dindigul.